# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2362 - 2023 දෙසැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2023.12.08

*2362 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 544 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 549 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2023, திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் சிதாரா ருவினி கமகே ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தம சனாதிபதி அவர்களால் 2009.08.20 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/ அம்கோ/2274 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான காசல்ரிகொலணி எனும் முகவரியில் வசிக்கும் வீரன் மூர்த்தி என்பவருக்கு கையளிக்கப்பட்டு, கம்பளை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ. பீ 15/255 ஆம் இலக்கத்தின் கீழ் 2009.12.15 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன்.இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புகள் இருப்பின் அவற்றை 2023.12.29 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

#### மேற்கூறிய அட்டவணை

நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் அம்பகமுவ பற்றில்/கோறளையிலுள்ள லெதெண்டி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த காசல்ரி எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிக்களத் தாளில் மு. வ. ப 2416 வதுவரைபடத்தில் 36 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டெயார் 0.088 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : 25 மற்றும் 21 ஆம் இலக்க காணித்துண்டு;
கிழக்கு : 21 மற்றும் 37 ஆம் இலக்க காணித்துண்டு;
தெற்கு : 37 மற்றும் 38 ஆம் இலக்க காணித்துண்டு;
மேற்கு : 38, 24 மற்றும் 25 ஆம் இலக்க காணித்துண்டு.

சிதாரா ருவினி கமகே,
பிரதேச செயலாளர்.

2023, யூலை 31.

12 - 268

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பாதஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) எச். கே. சாகரிகா தில்ஹானி ஆகிய நான், காணி அபிவிருத்திச் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உட்பிரிவின், கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1983.12.09 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/ப்ர/3317 ஆம்

*இலக்க அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான அபொன்சுவத்த குடியிருப்பு எனும் முகவரியில் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே ரன்பண்டா என்பவருக்கு கையளிக்கப்பட்டு கண்டி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் ஜீ133/1033 ஆம் இலக்கத்தின் கீழ் 1985.10.14 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட வில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் அளிப்பு பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புகள் இருந்தால் அவற்றை 2023.12.29 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**மேற்கூறிய அட்டவணை**

*கண்டி நிர்வாக மாவட்டத்தின் பாதஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவின் ஹேவாவிஸ்ஸ பற்றில்/ கோறளையிலுள்ள பாதமைலபிடிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பல்லே மைலபிடிய கிராமம் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 54/25/4 ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/ மு. பி. 2324 என்பவரால் தயாரிக்கப்பட்டு ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்ட - ரேகை வரைதலில் 112 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டேயர் 0.149 றூட் 00 பேரச்ச்ஸ் 00 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.*

வடக்கு : பிரவேசிக்கும் வழி;
கிழக்கு : காணித்துண்டு இல. 113;
தெற்கு : மினிரன்கல தோட்டம்;
மேற்கு : பிரவேசிக்கும் வழி காணித்துண்டு இலக்கம் 115.

எச். கே. சாகரிகா தில்ஹானி,
பிரதேச செயலாளர்.

*2023, பெப்புருவரி 10.*

*12 - 269/1*

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.

*மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) எச். கே. சாகரிகா தில்ஹானி ஆகிய நான், காணி அபிவிருத்திச் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உட்பிரிவின், கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1983.12.09 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/ப்ர/3288 ஆம் இலக்க அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான அபோன்சுவத்த எனும் முகவரியில் வசிக்கும் போதன்டராவே கெதர செனவிரத்ன என்பவருக்கு கையளிக்கப்பட்டு கண்டி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் ஜீ/116/390 ஆம் இலக்கத்தின் கீழ் 1990.07.16 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட நீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட வில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் அளிப்பு பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புகள் இருந்தால் அவற்றை 2023.12.29 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**மேற்கூறிய அட்டவணை**

*கண்டி நிர்வாக மாவட்டத்தின் பாதஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவின் ஹேவாவிஸ்ஸ பற்றில்/ பாதமைலபிடிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பல்லே மைலபிடிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும்,*

நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 54/25/4 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் - என்பவரால் தயாரிக்கப்பட்டு மு. பி. மஹ. 2324 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்ட ரேகை வரைதலில் 05 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டெயார் 0.105 றூட் 00 பேர்ச்சஸ் 00 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : பிரவேசிக்கும் வழி;
கிழக்கு : 06 ஆம் இலக்க காணித்துண்டு;
தெற்கு : 13 ஆம் இலக்க காணித்துண்டு;
மேற்கு : 04 ஆம் இலக்க காணித்துண்டு.

எச். கே. சாகரிகா தில்ஹானி,
பிரதேச செயலாளர்.

2023, பெப்புருவரி 10.

12 - 269/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.**

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பாதஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) எச். கே. சாகரிகா தில்ஹானி ஆகிய நான், காணி அபிவிருத்திச் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உட்பிரிவின், கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1983.12.09 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/ப்ர/3299 ஆம் இலக்க அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான அபோன்சுவத்த எனும் முகவரில் வசிக்கும் போலபே முதியன்சேலாகே ரண்பண்டா என்பவருக்கு கையளிக்கப்பட்டு கண்டி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் ஜீ116/387 ஆம் இலக்கத்தின் கீழ் 1990.07.16 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட வில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் அளிப்பு பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2023.12.29 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**மேற்கூறிய அட்டவணை**

கண்டி நிர்வாக மாவட்டத்தின் பாதஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவின் ஹேவாவிஸ்ஸ பற்றில்/கோறளையிலுள்ள பாத மைலபிடிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பல்லே மைலபிடிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 54/25/4 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் - என்பவரால் தயாரிக்கப்பட்டு மு. பி. மஹ. 2324 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்ட - ரேகை வரைதலில் 35 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டயார்/ஏக்கர் 0.121 றூட் 00 பேர்ச்சஸ் 00 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : ஹி. பி 44988 ஆம் இலக்கத்தினையுடைய காணி (வீதி அல்லாமல்)
கிழக்கு : காணித்துண்டு இல. 34;

தெற்கு : காணித்துண்டு இல. 36 மற்றும் 37;
மேற்கு : ஹி. பி. 44988 ஆம் இலக்கத்தினையுடைய காணி.

எச். கே. சாகரிகா தில்ஹானி,
பிரதேச செயலாளர்.

2023, பெப்புருவரி 10.

12 - 269/3

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவதுபிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப்பத்திரத்தினை இரத்துசெய்வதற்கான - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்தியமாகாணசபையின் கண்டிமாவட்டத்தில்பஸ்பாகேகோரளைபிரதேசசெயலாளர்பிரிவின்பிரதேசசெயலாளர்(மாகாணங்களுக்கு இடையிலான) ஆர். எம். ஷமீர நுவன் ரத்னாயக ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1995.11.04 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/பஸ்/733 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய இம்புல்பிட்டிய என்ற முகவரியில் வசிக்கும் ஹீனகெனத முதியன்சேலாகே குணவர்தன அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் A05/79 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.02.08 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வாமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்த போதிலும் அவர் பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை எனஅறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செயவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருந்தால் அவற்றை 2023.12.29 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**மேற்படி அட்டவணை**

கண்டி நிர்வாக மாவட்டத்தின் பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் பஸ்பாகே கோரளை இம்புல்பிட்டிய கிராம அலுவலர் பிரிவில் ஹோல்கம என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 61/22/2 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் - இலக்க துண்டாடப்படும் வரைபடத்தில் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பி. வ. மஹ 2299 ஆம் இலக்க நிரல் குறிப்பில் 33 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் ஹெக்டயார்கள் 0.207 ஏக்கர்கள் - ரூட்கள் - பேர்ச்ஸ்கள் - விஸ்தீரணத்தைக் உடையதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரசகாணி இம்புல்பிட்டிய தோட்டம்.

வடக்கு : 32 ஆம் காணித்துண்டு;
கிழக்கு : 14 மற்றும் 34 ஆம் காணித்துண்டு;
தெற்கு : 40 மற்றும் 34 ஆம் காணித்துண்டு;
மேற்கு : 40 மற்றும் 32 ஆம் காணித்துண்டு.

ஆர். எம். ஷமீர நுவன் ரத்நாயக்க,
பிரதேச செயலாளர்,
பஸ்பாகே கோரளை.

2023, பெப்புருவரி 22.

12 -270/1

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப்பத்திரத்தினை இரத்துச் செய்வதற்கான - (104 ஆம் பிரிவு) அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) ஆர். எம். ஷமீர நுவன் ரத்நாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1983.07.01 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/பீ/1835 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய மாபாகன்த குடியிருப்பில் வசிக்கும் பகீர் தம்பி ரசீனா உம்மா அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் ஏ1/125 ஆம் இலக்கத்தின் கீழ் 1985.03.15 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்த போதிலும் அவர் பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை எனஅறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செயவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருந்தால் அவற்றை 2023.12.29 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.*

#### மேற்படி அட்டவணை

*கண்டி நிர்வாக மாவட்டத்தில் பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் பஸ்பாகே கோரளை மாபாகன்த வடக்காக கிராம அலுவலர் பிரிவில் தெகிக என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட எல் 10/17.25 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் - ஆல் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க “துண்டாடப்படும் வரைபடத்தில் - ஆல் தயாரிக்கப்பட்ட பீ பீ ஏ 1120 ஆம் இலக்க நிரல் குறிப்பில் 55 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும். அளவில் ஹெக்டயார்கள்/ஏக்கர் 02 ரூட் 01 பேர்ச்ஸ் 27 விஸ்தீரணத்தை உடையதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரசகாணி மாபாகன்த குடியிருப்பில்.*

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 52 மற்றும் 54;
*கிழக்கு* : காணித்துண்டு இலக்கம் 57;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 56;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 56.

ஆர். எம். ஷமீரக நுவன் ரத்நாயக்க,
பிரதேச செயலாளர்,
பஸ்பாகே கோரளை.

*2023, பெப்புருவரி 14.*

*12 -270/2*

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/60563.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/14/HT/L/73/2019.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

பதுளை மாவட்டம், ஹப்புத்தளை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 63 பீ தியத்தலாவ கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த தியத்தலாவ கிராமத்தின் ஆரம்ப நில வரைபட இலக்கம் B/MY/UPLC/2020/194 இன் காணி துண்டு இலக்கம் A இன் மூலம் காட்டப்பட்டுள்ள 0.4380 ஹெக்டயர் அளவுடைய அரச காணியினை குறித்த அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு ஸ்ரீ சுதர்சன சமத்த விபஸ்ஸனா பாவனா பிரிவென மத்திய நிலைய பொறுப்புச் சபையினால் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

- வடக்கு : பாதை (பாதை அபிவிருத்தி அதிகார சபை)க்கு ஒதுக்கப்பட்ட காணி:
- கிழக்கு : குணசேகர அனுபவிக்கும் காணி (கேம்ப் ஹோட்டல்);
- தெற்கு : துண்டு பீ;
- மேற்கு : பாதையின் பொருட்டு ஒதுக்கப்பட்ட காணி.

கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தளைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (2021.03.21 ஆம் திகதியிலிருந்து 2051.03.24 ஆம் திகதி வரை)

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது 05 வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/உதவிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/உதவிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்ட நிலையில் பேணப்பட வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2021.03.25 ஆம் தினத்திலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்ய அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம் சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 13.

12 - 131

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/73451.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/13/BW/L/477.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பண்டாரவளை பிரதேச செயலகப் பிரிவிற்குச் சொந்தமான இல. 67 எத்தலப்பிட்டிய கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த எத்தலப்பிட்டிய கிராமத்தில் நில வரைபட இலக்கம் B/BND/2014/224 இன் காணி துண்டு இலக்கம் B இன் மூலம் காட்டப்பட்டுள்ள 0.0079 ஹெக்டயர் அளவுடைய அரச காணியினை சங்க நடவடிக்கைகளின் பொருட்டு எரணவெல ஐக்கிய நலன்புரி மரண ஆதார சங்கத்தின் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத் தரப்படுகிறது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : B/BND/2014/224 இன் துண்டுஇலக்கம் A மற்றும் FVP 26 இன் துண்டு இலக்கம் 998, 992:
கிழக்கு : FVP 26 இன் துண்டு இலக்கம் 992, 991;
தெற்கு : FVP 26 இன் துண்டு இலக்கம் 992, 991;
மேற்கு : FVP 26 இன் துண்டு இலக்கம் 998, 992 மற்றும் B/BND/2014/224 இன் துண்டு இலக்கம் A.

கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (2023.10.10 ஆம் திகதியிலிருந்து 2053.10.09 வரை 30 வருடங்கள்)

**வருடாந்தக் குத்தகைப் பணம்** .- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2023 ஆம் வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 1/2% ஆகும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை சமய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) கட்டப்பட்டுள்ள/ கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற கட்டடங்களை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள நிலையில் பேணப்பட வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) குத்தகை அனுமதிக்கப்பட்ட திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்ய அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகைப் பணத்தைத் தொடர்ச்சியாக செலுத்தாத விடத்து செலுத்தப்பட வேண்டிய நிலுவைப் பணத்தின் பொருட்டு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம் சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 15.

12 - 156

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/73601.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: EP/28/1B/LS/BAT/MSW/05.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 127 – சீ கற்சேனை கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த கற்சேனை கிராம நில வரைபடத்தின் 71.66 பேர்ச் அளவுடைய நிலப் பகுதியினை அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு (நெல் களஞ்சியசாலையின் பொருட்டு) வினோதனி ஜீவராஜ் என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரபப்படுகிறது. கோரப்படும் காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காந்தப்பனுடைய காணி:
கிழக்கு : குமாரப்பொடியின் காணி;
தெற்கு : பாதை;
மேற்கு : நுதல்விலிவின் காணி.

02. இக்காணியானது குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்படக்கூயதாய் இருக்கின்றது. இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .– முப்பது (30) வருடங்கள் (2023.10.10 ஆம் திகதியிலிருந்து 2023.10.09 ஆம் திகதி வரை)

(ஆ) **வருடாந்தக் குத்தகை பணம்**.– 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொருமுறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த 05 வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .– தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரின் மூலம் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்திப்படுமாறு காணியானது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரின் மூலம் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாறணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு விடப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.01.10 ஆம் தினத்திலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்ய அல்லது வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இடைநிறுத்தப்படும் பட்சத்தில் குத்தகை சுயமாகவே செல்லுபடியற்றதாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியானது குத்தகைக்கு அனுமதித்தலாகாது என எண்ணும் பட்சத்தில் அவற்றுக்கான தகுந்த காரணங்களை எழுத்து மூலம் எனக்கு அறிவிக்காதவிடத்து காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம் சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 16.

12 - 157

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/67209.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: EP/28/LB/LS/BAT/MN/36.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான சத்துருகொத்தான் கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த சத்துருகொத்தான் கிராமத்தின் 10 ஏக்கர் அளவுடைய நிலப் பகுதியினை கொட்டாமுனை கிராம விளையாட்டு பொறுப்புச் சபையினர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

கோரப்படும் காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : சின்ன சவுக்கடி மற்றும் பாதை:
கிழக்கு : சின்ன சவுக்கடி;
தெற்கு : சின்ன சவுக்கடி;
மேற்கு : சின்ன சவுக்கடி.

02. இக்காணியானது குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2023.10.10 ஆம் திகதியிலிருந்து)

(ஆ) **வருடாந்தக் குத்தகை பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் அதிகாரிக்கப்படாத சந்தைப் பெறுமதியின் 2% ஆகும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரின் மூலம் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்திப்படுமாறு காணியானது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக் காரரின் மூலம் இக்காணியினை கொட்டாமுனை கிராம விளையாட்டு பொறுப்புச் சபையின் நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு விடப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.01.10 ஆம் தினத்திலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இடைநிறுத்தப்படும் பட்சத்தில் குத்தகை சுயமாகவே செல்லுபடியற்றதாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியானது குத்தகைக்கு அனுமதித்தலாகாது என எண்ணும் பட்சத்தில் அவற்றுக்கான தகுந்த காரணங்களை எழுத்து மூலம் எனக்கு அறிவிக்காதவிடத்து காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம் சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 17.

12 - 158

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.